கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)

திருமங்கலம்.

2025ம் வருடம் நவம்பர் மாதம் 24ம் தேதி திங்கள்கிழமை

இடைநிலை மனு எண்.3/2025

இன்

அசல் வழக்கு எண்.271/2016

* * * *

1) மகாலிங்க கார்த்திக்

2) கடற்கரை

3) முனியம்மாள்

4) கல்யாணசுந்தரம் ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1) தமிழக அரசுக்காக,
மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை

2) தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை,
அதன் ஆணையர் மூலமாக, சென்னை

3) அ.கொக்குளம் கிராமம்,
அருள்மிகு அம்மச்சியார் கோவில் அதன்
Fit person மூலமாக,

4) தனித்தாசில்தார்(மாவட்ட வருவாய் அலுவலர்) அவர்கள்,
கோவில் நிலப்பிரிவு
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை.

5) வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம்,
திருமங்கலம், மதுரை வட்டம்.

... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனு 24.11.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு வழக்கறிஞர் திரு.S.மாதவன் அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4, 5 எதிர்மனுதாரர்கள்/1, 2, 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், மனு மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

<u>**உத்தரவு**</u>

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி கட்டளை 16 விதி 1(2) மற்றும் 151 cpc படி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுவின் சுருக்கம்</u> :**

2.1 மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக, சுத்த நகல் பிரிவு, தனி அலுவலர் மூலமாகவோ அவரது முகவர் மூலமாகவோ தகுந்த அதிகாரியின் சான்றொப்பம் பெற்று கீழ்கண்ட ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2. மனுதாரர்கள்/வாதிகள் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறி எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

**<u>தீர்மானிக்க வேண்டிய விசயம்</u>** :

4. மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u> :**

5. இம்மனுவானது மாவட்ட ஆட்சியர் அலுவலக, சுத்த நகல் பிரிவு, தனி அலுவலர் அவர்கள் மூலமாக கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிட இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6. அசல் வழக்கானது கடந்த 2016 முதல் நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், இம்மனுவானது மாவட்ட ஆட்சியர் அலுவலக, சுத்த நகல் பிரிவு, தனி அலுவலர் அவர்கள் மூலமாக கீழ்கண்ட ஆவணங்களான 1) 06.10.1971ம் தேதி சென்னை உயர் நீதிமன்றம் C.M.P No.10506/1970 in S.A. No.1165/1970ல் வழங்கிய உத்தரவு, 2) 25.08.1975ம் தேதி மதுரை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த Appeal No.94/1971ல் வழங்கிய உத்தரவு, 3) 25.08.1975ம் தேதி மதுரை சார்பு நீதிமன்றம் C.M.P No.94/1971 in S.A No.335 & 370/1975–ல் வழங்கிய உத்தரவு,

மற்றும் 4) 28.01.1981ம் தேதி சென்னை உயர் நீதிமன்றம் S.D.No.102/1980–ல் வழங்கிய உத்தரவு ஆகிய ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. மேற்படி, மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ளபடி ஆவணங்களானது மாண்புமை நீதிமன்ற உத்தரவுகளாக காணப்பட்டுள்ளது. இந்நிலையில், மனுதாரர்கள் சம்பந்தப்பட்ட மாண்புமை நீதிமன்றத்தில் உரிய நகல் மனு தாக்கல் செய்து, மேற்படி ஆவணங்களின் நகல்களை பெற வழிவகை உள்ள நிலையில், மேற்படி ஆவணங்களை சட்டப்படியாக வழங்குவதற்கு அதிகாரம் இல்லாத மாவட்ட ஆட்சியர் அலுவலக, சுத்த நகல் பிரிவு, தனி அலுவலர் அவர்கள் கொண்டு வர வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படியாக காணப்படவில்லை. மேலும், மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவானது உரிய சட்ட வழிவகைகளை பின்பற்றி தாக்கல் செய்யவில்லை என்பதை கருத்தில் கொண்டும், அசல் வழக்கானது 2016ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருகிறது என்பதை கருத்தில் கொண்டும், இம்மனுவானது அசல் வழக்கின் காலதாமதத்தை ஏற்படுத்தும் விதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதத்தை கருத்தில் கொண்டும், இம்மனு சட்டப்படி நிலைத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகளின் இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 24ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.24 16:36:26 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**இணைப்பு:**

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இருதரப்பிலும் தாக்கல் இல்லை.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.11.24 16:36:34 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண். 3 /2025
அசல் வழக்கு எண்.271/2016
வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 24.11.2025